# "முறைசாரா கடன் முறைகளினால் சமூகத்தில் ஏற்படும் தாக்கங்கள்: நிந்தவூர் பிரதேச செயலகப் பிரிவை மையப்படுத்தியதோர் சமூகவியல் ஆய்வு"


**Supervisor**
*Mrs. AWN. Naleefa,*
*Lecturer (Prob.),*
*Faculty of Arts & Culture*
*SEUSL*

**Researcher**
*Miss. N. Lumna,*
*Department of Social Sciences,*
*Faculty of Arts & Culture*
*SEUSL*


## ஆய்வுச் சுருக்கம்


உலகில் பெரும்பாலான மக்கள் இன்னும் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். இலங்கையைப் பொறுத்தவரை ஏறக்குறைய 24000 கிராமங்கள் காணப்படுகின்றன. இக்கிராமிய துறையினருக்குரிய முக்கிய பிரச்சினையாக நிதிப் பற்றாக்குறை காணப்படுகிறது. எனவே கடன் வழங்குதல் என்பது இவர்களை பொறுத்தவரை அவசியமாகின்றது. இவர்களுக்கான கடன்கள் பெரும்பாலும் முறைசாரா கடன் மூலகங்களினாலேயே வழங்கப்படுகின்றது. நாட்டின் மொத்த கடனில் 75 முதல் 80 சதவீதம் வரை முறைசாரா துறையினராலேயே வழங்கப்படுகின்றது. பொதுவாக வட்டிக்கு கடன் கொடுப்போர், அடகு பிடிப்போர், தொழில் ரீதியாக கடன் கொடுப்போர், சங்கங்கள் , சீட்டு முறை, நிலச் சுவாந்தர்கள், தரகு முகவர்கள், வர்த்தகர்கள், உறவினர்கள், நண்பர்கள் என்பன முறைசாரா கடன் மூலகங்களாக கொள்ளப்படுகின்றன. இவற்றினூடாக இடம்பெறும் கடன் முறைகள் முறைசாரா கடன் முறைகளாகும்.

இன்று இம்முறைசாரா கடன் முறைகள் வெகுவாக அதிகரித்துக்கொண்டு வரும் சூழ்நிலையில் இதனால் ஏற்படும் தாக்கங்களும் அதிகரித்துள்ளது. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் முறைசாரா கடன் முறைகளை இவ்வாய்வு அடையாளங்காண முயற்சித்துள்ளது. இத்தகைய கடன் முறைகளினால் சமூகத்தில் பல்வேறுபட்ட தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. இத்தகைய தாக்கங்களை கண்டறிந்து அவற்றிற்கான மும்மொழிவுகளை விதந்துரைக்க இவ்வாய்வு முனைந்துள்ளது. இவ்வாய்வின் பிரதான நோக்கமாக: நிந்தவூர் பிரதேசத்தில் காணப்படும் முறைசாரா கடன் முறைகளினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சமூக, பொருளாதார தாக்கங்களை கண்டறிதல் காணப்படுகிறது.

இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவில் வினாக்கொத்து (Questionnaire), நேர்காணல் (Interview), அவதானம் (Observation), இலக்குக்குழுவுடனான கலந்துரையாடல் (Focus Group Discussion) போன்றவை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 20 வினாக்கொத்துக்கள் மூலம் நிந்தவூர் பிரதேசத்தின் குறிப்பிட்ட ஒரு பிரிவில் நோக்க மாதிரி நுட்பமுறை அடிப்படையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. 05 பேர் பிரதான தகவலாளர்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர். 01 இலக்குக் குழுவுடனான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட தரவுகளைக் கொண்டு தொகை மற்றும் பண்புசார் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதியாக இவ்வாய்வில் நிந்தவூர் பிரதேசத்தில் முறைசாரா கடன் முறைகளினால் சமூக உறவுகளில் விரிசல், சமூக அந்தஸ்த்தில் பாதிப்பு, குடும்ப சீரழிவுகள், விவாகரத்து, தகாத உறவுகள், தற்கொலை முயற்சி, சமூகத்திலிருந்து தலைமறைவாதல், கலாச்சார மற்றும் பண்பாட்டு

ரீதியான சீரழிவுகள், சமய கட்டமைப்பில் தாக்கம், கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு, அதிகரித்த வட்டி, வருமானத்தில் பாதிப்பு, வறுமை, வாழ்க்கைச்செலவில் தாக்கம், சேமிப்பில் முடக்கம், சொத்திழப்பு போன்ற சமூக, பொருளாதார ரீதியான எதிர்மறையான தாக்கங்கள் அதிகமாக ஏற்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டுள்ளது.

***Key Words:*** முறைசாரா கடன், கடன் கொடுப்போர், கடன் பெறுவோர்.